# கர்த்தருடைய நாள்

ஓவன் டி. ஆல்பிரைட்

*கர்த்தருடைய நாளில் ஆவிக்குள்ளானேன்; அப்பொழுது எனக்குப் பின்னாலே எக்காள சத்தம் போன்ற பெரிதான ஒரு சத்தத்தைக் கேட்டேன் (வெளி. 1:10).*

இஸ்ரவேலர்கள் எகிப்திய அடிமைத்தளையினின்று தாங்கள் விடுதலையடைந்ததை நினைவுகூர ஒரு நாளைப் பெற்றிருந்தனர். கிறிஸ்தவர்கள், பாவத்தின் அடிமைத்தளையிலிருந்து தாங்கள் விடுதலை பெற்றதை நினைவுகூருவதற்குச் சிறப்பான ஒரு நாளைத் தனியே பெற்றுள்ளார்களா? கிறிஸ்தவர்கள், இஸ்ரவேலர்களின் ஓய்வுநாளன்று கூட வேண்டியுள்ளதா? அல்லது தம்முடைய மரணத்தினாலும் உயிர்த்தெழுதலினாலும் தங்களை விடுவித்தவரை நினைவுகூர அவர்கள் தங்களுக்கென்று தனிப்பட்ட ஒரு நாளைக் கொண்டுள்ளார்களா?

கிறிஸ்தவர்கள் ஒன்றுகூட வேண்டிய நாளுக்கான ஆதாரமானது (1) புதிய ஏற்பாட்டின் போதனை, (2) ஆதி சபையினரால் பயன்படுத்தப்பட்ட "கர்த்தருடைய நாள்" என்பதன் அர்த்தம், மற்றும் (3) கிறிஸ்தவர்கள், கிறிஸ்தவரல்லாதவர்கள் ஆகியோரின் தொடக்க கால எழுத்துக்களில் காணப்படும் வரலாற்றுப் பதிவுகள் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்துள்ளது. தொடக்க காலக் கிறிஸ்தவர்கள் வாரத்தின் ஏழாம் நாளில் கூடி வந்தார்கள் என்றால், அது ஓய்வுநாளில் யூதர்கள் கூடி வந்ததற்கான நோக்கத்திலிருந்து மாறுபட்ட ஒரு நோக்கத்திற்காகவே இருந்திருக்கும்.

இயேசுவின் காலத்தில், யூதர்கள் ஓய்வுநாளில் கூடி வந்தனர். அந்த நாளில் அவர்கள் வேலை எதுவும் செய்யாதிருந்தபடியினால் அது ஒரு வசதியான நாளாய் இருந்தது. "ஜெப ஆலயத்தின் முக்கிய நோக்கம் என்பது பொதுவான ஆராதனை என்பதாக இன்றி, பரிசுத்த வேத வசனங்களின் அறிவுறுத்தல்களைத் தருதல் என்பதாகவே இருந்தது."[1]

## புதிய ஏற்பாட்டு வசனப் பகுதிகள்

கிறிஸ்தவர்கள் ஓய்வுநாளன்று கூடி வரவில்லை. அவர்கள் இயேசுவின் மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் நினைவுகூருவதற்காக ஓய்வுநாளுக்கு அடுத்த நாளில் கூடி வந்தார்கள்.

தனிப்பட்ட ஒரு நாளில் கிறிஸ்தவர்கள் கூடி வந்தார்கள் என்பதற்கு அப். 20:7ல் ஒரே ஒரு குறிப்பு மட்டுமே காணப்படுகின்றது:

வாரத்தின் முதல் நாளிலே, அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடி

*வந்திருக்கையில், பவுல் மறுநாளிலே புறப்படவேண்டுமென்றிருந்து, அவர்களுடனே சம்பாஷித்து, நடுராத்திரிமட்டும் பிரசங்கித்தான் (அப். 20:7).*

பெந்தெகொஸ்தே பண்டிக்கைக்கு எருசலேமில் இருக்க வேண்டும் என்று பவுல் விரைந்து கொண்டிருந்தாலும் (அப். 20:16), அவர் துரோவாவில் இருந்த கிறிஸ்தவர்களுடன் அவர்கள் கூடிவரும் நாளான வாரத்தின் முதல் நாளில் அவர்களோடு சேர்ந்து ஆராதிக்க வேண்டும் என்பதற்காக அங்கு ஒரு வாரம் முழுவதும் தங்கியிருந்தார் (அப். 20:6). அப்பம் பிட்கும்படியாக அவர்கள் கூடியிருந்த பொழுது, அவர் அந்த வாய்ப்பை அவர்களுக்குப் பிரசங்கம் செய்யப் பயன்படுத்திக் கொண்டார். F. F. புரூஸ் அவர்கள் பின்வருமாறு எழுதினார்.

> துரோவாவில் பயணிகளும் அந்தத் துறைமுக நகரில் இருந்த அவர்களது சக கிறிஸ்தவர்களும் "வாரத்தின் முதல் நாளிலே" அப்பம் பிட்கக் கூடி வந்தனர் என்ற கூற்றானது கிறிஸ்தவர்கள் அந்த(க் குறிப்பிட்ட) நாளில் ஆராதிக்கக் கூடிவரும் நடைமுறைக்கான தொடக்க காலத்திய தெளிவான ஆதாரமாக நம்மால் பெறப் பட்டுள்ளது.[2]

சீமோன் J. கிஸ்ட்மேக்கர் அவர்களும் இதைப் பின்வருமாறு ஒப்புக் கொண்டார்:

> வாரத்தின் முதல் நாளில் (அதாவது, ஞாயிற்றுக் கிழமை; இது ஞாயிறு ஆராதனைக்கான புதிய ஏற்பாட்டின் முதல் குறிப்புரையாக உள்ளது) கர்த்தருடைய பந்தியை ஆசரிப்பதற்கும், அதைத் தொடர்ந்து "அன்பின் விருந்து" என்ற சமூக விருந்தில் கலந்து கொள்வதற்கும் கிறிஸ்தவர்கள் ஒன்று கூடினர். நடபடிகளில் அப்பம் பிட்குதல் என்ற சொற்றொடரானது கர்த்தருடைய பந்தியை அர்த்தப்படுத்துவதாகவே உள்ளது ...[3]

வில்லி ரோடார்ஃ அவர்கள், "அப். 20:7ல் அப்பம் பிட்குதல் என்பதன் மூலம் நிச்சயமாக அர்த்தப்படுத்தப்படுவது 'கர்த்தருடைய பந்தியே' ஆகும்"[4] என்று எழுதினார்.

J. W. மெக்கார்வி அவர்கள் மிகச் சரியாகப் பின்வருமாறு எழுதினார்:

> இவ்வசனப் பகுதியானது சீஷர்கள் அப்பம் பிட்ட நாள் வாரத்தின் முதல் நாளே என்று காண்பிக்கின்றது; மற்றும் அவர்கள் கூடி வந்ததின் முக்கிய நோக்கம் இந்தக் கட்டளையை நிறைவேற்றுதலாகவே இருந்தது என்பதையும் இது காண்பிக்கின்றது. அந்த வேளையில் பவுலின் பிரசங்கம் என்பது தற்செயலானதாக இருந்தது. கர்த்தருடைய பந்தி தொடக்கத்தில் நிறுவப்பட்ட வேளையில், அது எத்தனை நாட்களுக்கு ஒரு முறை கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்பதைப் பற்றி ஒன்றும் கூறப்படவில்லை. "நீங்கள் இதைப் பானம்பண்ணும் போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்"

> *(1 கொரி. 11:25)* என்பவைகளே கர்த்தருடைய வார்த்தைகளாக உள்ளன. இதைக் குறித்து அதிகமாக வேறு ஒன்றும் கூறப்படா திருந்தால், இதை எத்தனை நாட்களுக்கு ஒருமுறை கடைப்பிடிக்க வேண்டும் என்பது பற்றி விசுவாசிகளின் ஒவ்வொரு சபையும் தனது சொந்தத்தில் முடிவெடுத்துக் கொள்ளும்படி விட்டு விடப் பட்டிருக்கும். ஆனால், இவ்விஷயத்தில் அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியானவரால் பின்பு வழி நடத்தப்பட்டனர், கர்த்தருடைய சொந்த போதனையாக அடையாளப்படுத்தப்பட்ட மற்ற கருத்துக்களில் உள்ளது போலவே இதிலும் அவர்களுடைய உதாரணமே நமக்கு வழிகாட்டியாக உள்ளது. இந்தப் பாடக் கருத்தைப் பற்றிச் சிறிதளவே கூறப்பட்டுள்ளது, ஆனால் அந்தச் சிறிதளவானது இந்தக் கட்டளையை வாரத்திற்கொருமுறை கடைப்பிடிப்பதற்கே ஆதரவாக உள்ளது.[5]

கர்த்தருடைய பந்தி என்பதை மறைமுகமாய்க் குறிப்பிடும் அப்பம் பிட்குதல் என்ற சிறப்பான கடைப்பிடித்தலுக்காக கிறிஸ்தவர்கள் ஞாயிற்றுக்கிழமையில் கூடி வந்தனர் என்பதை அப். 20:7 தெளிவாகக் காண்பிக்கின்றது. அவர்கள் மற்ற நாட்களிலும் கூடி வந்தனர், ஆனால் ஞாயிற்றுக்கிழமை என்பது ஒரு சிறப்பான நாளாக, அவர்களுடைய கர்த்தரின் நாளாக இருந்தது.

கிறிஸ்தவர்கள் ஞாயிற்றுக்கிழமையன்று கூடி வந்தனர் என்பதை இன்னொரு வசனப் பகுதி மறைமுகமாய்ச் சுட்டிக்காட்டுகின்றது: "பரிசுத்தவான்களுக்காகச் சேர்க்கப்படும் தர்மப் பணத்தைக் குறித்து, நான் கலாத்தியா நாட்டுச் சபைகளுக்குப் பண்ணின திட்டத்தின்படியே நீங்களும் செய்யுங்கள். நான் வந்திருக்கும் போது பணஞ் சேர்க்குதல் இராதபடிக்கு, உங்களில் அவனவன் வாரத்தின் முதல் நாள் தோறும் தன் தன் வரவுக்குத் தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்து வைக்கக் கடவன்" *(1 கொரி. 16:1, 2)*.

இந்தக் கூற்றிலிருந்து நான்கு முடிவுகள் மேற்கொள்ளப்பட முடியும்:

(1) பவுல் கட்டளையிட்ட நடைமுறையானது கொரிந்து நகரில் இருந்த சபைக்கு மட்டுமின்றி மற்ற இடங்களில் இருந்த சபைகளுக்கும் ஏற்புடையதாக இருந்தது.

(2) பவுல் வரும் பொழுது பணம் சேர்ப்பதற்காக எல்லாரிடத்திலும் செல்ல அவசியமிராதபடிக்கு, தேவையில் இருப்பவர்களுக்கான பணம் சேகரித்தல் என்பது ஒவ்வொரு வாரத்தின் முதல் நாள் தோறும் நடைபெற வேண்டும்.

(3) ஞாயிற்றுக்கிழமையானது கிறிஸ்தவர்கள் ஓரிடத்தில் கூடிவரும் நாளாய் இருப்பதால், அந்த நாள் (இந்த செயலைச் செய்வதற்காகத்) தேர்ந்து கொள்ளப்பட்டது. அவர்கள் ஒன்றுகூடுகையில் அவரவர் தங்கள் தங்கள் வரவுக்குத் தக்கதாகக் கொடுக்க முடிந்தது.

(4) வாரத்தின் முதல் நாள் என்பது அவர்கள் ஒன்றுகூடி வருவதற்கான ஒரு தனிச் சிறப்புமிக்க நாளாக இருந்திருக்க வேண்டும். இல்லையென்றால், வேறொரு நாள் தேர்ந்து கொள்ளப்பட்டிருக்கும்.

## கர்த்தருடைய நாள்

வெளி. 1:10ல் ''கர்த்தருடைய நாள்'' என்ற யோவானின் பயன்பாடானது, இயேசுவைக் கனப்படுத்துவதற்கு ஆதிக் கிறிஸ்தவர்கள் ஒரு சிறப்பான நாளைக் கொண்டிருந்ததை மறைமுகமாய் உணர்த்துகின்றது. "Lord's day" *(கிரேக்கம்: te kuriake [or kyriake] hemera)* என்பது "day of the Lord" *(கிரேக்கம்: hemera tou kuriou)* என்பதைப் போன்றது அல்ல, "day of the Lord" என்பது தேவன் தம்முடைய பழி வாங்குதலைக் கொண்டு அழிவை வரவழைக்கும் அவருடைய கோபாக்கினை வெளிப்படும் நாள் எதையும் குறிக்கப் பயன்படுத்தப் படுகின்றது (2 பேது. 3:10).

உரிப் பெயர்ச் சொல் ஒன்றுக்குப் பதிலாக, kuriake என்பது கர்த்தருக்குக் கனம் செலுத்தும் நாள் என்ற கருத்தில் ஒரு பெயர் உரிச் சொல்லாக உள்ளது. இது, "கொடி நாள்," "பேரரசர் நாள்" மற்றும் "சுதந்திர தினம்" என்பது பயன்படுவது போலவே உள்ளது; பெயர்ச் சொற்கள் பெயர் உரிச் சொற்களாகப் பயன்படுத்தப்படுதலானது அந்த நாட்கள் கொடி, பேரரசர் அல்லது சுதந்திரத்தைக் கனப்படுத்தத் தனிப்பட ஒதுக்கப்பட்டுள்ளதைக் காண்பிக்கின்றது.

"கர்த்தருடைய நாள்" (இது ஒரு பெயர் உரிச் சொல்லாய் இருப்பதால் உரிச் சொல் வடிவம் தேவையற்றது) அல்லது ''மேன்மையான நாள்'' (Interlinear versionல் மொழிபெயர்க்கப்பட்டுள்ளபடியானது)[6] என்பது கர்த்தரைக் கனப்படுத்துவதற்கும், அவரது நினைவுகூருதலுக்கும் என்று தனிப்பட வைக்கப்பட்ட விசேஷித்த நாளாக உள்ளது. இது எகிப்திய அடிமைத் தளையிலிருந்து விடுவித்ததை நினைவுகூருவதற்காக இளைப்பாறுவதற்காக ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த யூதருடைய ஓய்வுநாள் போன்றதாக இருப்பதில்லை.

"Lord," *kuriake* ''கர்த்தர்'' என்ற வார்த்தையானது பெயர் உரிச் சொல்லாகப் புதிய ஏற்பாட்டில் மீண்டும் ஒரே ஒருமுறை மட்டுமே காணப்படுகின்றது, அது கர்த்தரைக் கனப்படுத்தி நினைவுகூருவதற்கான பந்தியைக் குறிப்பிடுகின்றது (1 கொரி. 11:20-26). இந்தப் பந்தியானது அவரைக் கனப்படுத்துவதற்காகத் தனிப்பட வைக்கப்பட்ட விசேஷித்த நாளில் கடைப்பிடிக்கப்பட்டது.

*Te kuriake hemera* என்ற சொல் விளக்கமானது புதிய ஏற்பாட்டிற்குப் புறம்பே வாரத்தின் முதல் நாளாகிய ஞாயிற்றுக் கிழமையை மட்டுமே குறிப்பதாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது, வெளி. 1:10ல் யோவான் வாரத்தின் முதல் நாளாகிய ஞாயிற்றுக் கிழமையன்று ஆவிக்குள்ளானார் என்ற உண்மையை வலுப்படுத்துகின்றது. இது இயேசு உயிர்த்தெழுந்த நாளாகவும் இருந்தது (மத். 28:1; மாற். 16:1, 2; லூக். 24:1) மற்றும் இதுவே கிறிஸ்தவர்கள் கூடி வந்த நாளாகவும் இருந்தது.

## தொடக்க காலக் கிறிஸ்தவ இலக்கியம்

"கர்த்தருடைய நாள்" என்பது ஞாயிற்றுக் கிழமையைக் குறிப்பதாகக் கல்வியாளர்கள் பலர் முடிவு செய்துள்ளனர். இரண்டாம் நூற்றாண்டின்

இலக்கியத்தில் இந்தச் சொற்றொடர் ஞாயிற்றுக்கிழமையைக் குறிப்பதற்கு அடிக்கடி பயன்படுத்தப்படுவதன் அடிப்படையில் இந்த முடிவானது நிலைநாட்டப்பட்டுள்ளது.[7] எடுத்துக்காட்டாக, கி.பி. 180 அளவில் எழுதப்பட்ட பேதுருவின் சுவிசேஷம் என்ற நூலில் பின்வரும் கூற்று அடங்கியுள்ளது: ‘‘கர்த்தருடைய நாளின் அதிகாலைப் பொழுதில், கர்த்தருடைய சீஷியான மகதலேனா மரியாள் ... கல்லறைக்கு வந்தாள்.’’[8] அலெக்சாந்திரியாவின் கிளமெண்ட் அவர்கள் கி.பி. 190 ஆண்டளவில், “அவர் சுவிசேஷக் கட்டளையின்படி செய்கின்றவராயிருந்து கர்த்தருடைய நாளைக் கடைப்பிடிக்கின்றார், அப்பொழுதெல்லாம் பொல்லாத சிந்தையைப் புறம்பே தள்ளி ... கர்த்தருடைய உயிர்த்தெழுதலைத் தமக்குள் மகிமைப்படுத்துகின்றார்”[9] என்று எழுதினார்.

இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு அவர் தந்த தரிசனங்களிலும் ஞாயிற்றுக் கிழமையானது ஒரு விசேஷித்த நாளாக இருந்தது.

> கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு அவர் தரிசனம் தந்ததாகச் சுவிசேஷ நூல்களில் பதிவாகியுள்ள எட்டு தரிசனங்களில் ஆறு தரிசனங்கள் ஞாயிற்றுக் கிழமையன்று நடந்ததாக உள்ளன: (1) மகதலேனா மரியாளுக்கு (யோவான் 20:11-18); (2) அவரது சரீரத்தை அபிஷேகிக்கச் சுகந்த வர்க்கங்களைக் கொண்டுவந்த பெண்களுக்கு (மத். 28:7-10); (3) எம்மாவு செல்லும் சாலையில் இரண்டு சீஷர்களுக்கு (லூக். 24:13-33); (4) சீமோன் பேதுருவுக்கு (24:34); (5) தோமா இல்லாதபோது பத்து அப்போஸ்தலர்களுக்கு (யோவான் 20:19-23; இ.வ. லூக். 24:36-49); மற்றும் (6) தோமா இருந்த பொழுது பதினோறு அப்போஸ்தலர்களுக்கு (யோவா. 20:24-29).[10]

மற்ற முக்கிய நிகழ்ச்சிகளும் ஞாயிற்றுக் கிழமையன்று நடந்தன. பஸ்கா பண்டிகையைத் தொடர்ந்து வந்த ஞாயிற்றுக்கிழமையன்று இயேசு உயிர்த்தெழுந்தார் (மத். 28:1). அதற்கு அடுத்த ஐம்பதாவது நாளில் பெந்தெகொஸ்தே பண்டிகை தொடங்கியது (லேவி. 23:15, 16), இது சபை நிலைநாட்டப்பட்டதும் ஆவியானவர் பொழிந்தருளப்பட்டதும் ஞாயிற்றுக்கிழமையன்று நடந்ததாக அர்த்தப்படுத்தும், அதுவே பெந்தெகொஸ்தே நாளாக இருந்தது (அப். 2:1-4).

“கர்த்தருடைய நாள்” என்பது இயேசுவைக் கனப்படுத்தவும் அவரை நினைவுகூரவும் கூடிவரும் ஒரு விசேஷித்த நாளாகக் கிறிஸ்தவர்களுக்கு இருந்தது என்பதைச் சாட்சியத்தின் வலுத்தன்மையானது சுட்டிக் காட்டுகின்றது. இந்தச் சொற்றொடரானது வாரத்தின் முதல் நாளான ஞாயிற்றுக் கிழமையைக் குறிப்பதற்காக தொடக்க கால எழுத்தாளர்களால் பயன்படுத்தப்பட்டது.

## வரலாற்று ஆதாரம்

அப்போஸ்தலர்களின் காலத்திற்குப் பிறகு அதைத் தொடர்ந்து வந்த வேளையில் வாழ்ந்திருந்தவர்கள், தொடக்க காலச் சபையார் வாரத்தின் முதல் நாளான ஞாயிற்றுக் கிழமையில் சபை கூடி வரும் விசேஷித்த நாளாக

*அந்நாளில் ஆராதனை செய்தனர் என்று உறுதிப்படுத்தி எழுதினர். இவற்றில் இரண்டாம் நூற்றாண்டின் எழுத்தாளர்களுடைய எழுத்தாக்கங்களும் உள்ளடங்குகின்றன (கி.பி. 101-200):*

> *(1) இக்னேஷியஸ் அவர்கள், ‘‘புதிய நம்பிக்கையைப் பெற்றுக் கொண்டவர்கள் இனியும் ஓய்வுநாளைக்* [*நேரடியான பொருள்:* “Sabbathing”] *கடைப்பிடிக்கவில்லை, ஆனால் அவர்கள் கர்த்தருடைய நாளுக்காக* [*கிரேக்கம்: kyriake*, *இதில் “நாள்” என்பதற்கு வார்த்தை யின்றி உள்ளது*] *வாழ்ந்தார்கள், அந்நாளில்தான் அவர் மூலமாகவும் அவருடைய உயிர்த்தெழுதல் மூலமாகவும் நமது வாழ்வு உதித்தெழுந்தது”* (Magn. 9:1) *என்று குறிப்பிடுகின்றார். இவ்விடத்தில் kyriake என்பது வெளி. 1:10ல் பயன்படுத்தப்பட்ட சொல் விளக்கத்தின் சுருக்க வடிவமாய் இருப்பதாகக் காணப்படுகின்றது, மற்றும் சந்தர்ப்பப் பொருளுடன் கூட, இந்த உண்மையானது மொழிபெயர்ப்பில் “நாள்” என்ற வார்த்தையைப் பயன்படுத்தும்படி வழிநடத்துகின்றது. இந்த சந்தர்ப்பப் பொருளில் இக்னேஷியஸ் அவர்கள் ஆராதனையைத் திட்டவட்டமாகக் குறிப்பிடுவதில்லை. (2)* Did. 14:1 *ஆனது கிறிஸ்தவ ஆராதனை வேளைக்கு* “Lord’s [Day] of the Lord” *என்ற வழக்கில் இல்லாதிருந்த சொல் விளக்கத்தைப் பயன்படுத்துகின்றது, ஆனாலும் இது இந்நாளை ஓய்வுநாளுடன் நேரெதிராக ஒப்பிடுவதில்லை. (3) அது போலவே, பிளீனி என்பவர் ட்ரேஜனுக்கு எழுதிய தமது புகழ் மிக்க கடிதத்தில்* (*Ep.* x. 96) *கிறிஸ்தவர்கள் துதிப்பாடல்கள் பாடுவதற்காக (அல்லது வசனங்களின் வடிவை ஒப்பிப்பதற்காக) குறிப்பிட்ட ஒரு நாளில் கூடி வந்தனர் என்று கூறுகின்றார், ஆனால் அவர் அந்த நாள் எது என்பதைத் திட்டவட்டமாகக் குறிப்பிடவில்லை. (4)* Barn. 15:9 *ஆனது முதல் நாளின் (இது பழைய படைப்பின் எட்டாவது நாள் என்று அழைக்கப் பட்டது) தனிச் சிறப்பை வெளிக் கொண்டு வருகின்றது, ஆனால் இது kyriake என்ற வார்த்தைப் பதத்தைப் பயன்படுத்துவதில்லை. இப்பகுதிகளை ஒன்றுகூட்டிப் பார்க்கையில் மட்டுமே தொடக்க காலக் கிறிஸ்தவர்கள் உயிர்த்தெழுதலின் நாளான வாரத்தின் முதல் நாளில் ஆராதிக்க ஒன்றுகூடினர் என்பதை இவைகள் மறைமுகமாய் உணர்த்துகின்றன.*[11]

*ஒருவேளை, அப்போஸ்தலரான யோவானின் சீஷராக இருந்திருக்கக் கூடிய இக்னேஷியஸ் அவர்கள் Magnesians என்ற நூலின் எழுத்தாளராய் இருந்தார். பிளீனி என்பவர் கிறிஸ்தவரல்ல, ஆனால் பேரரசனான ட்ரேஜனின் கீழ் பொந்து மற்றும் பித்தினியாவின் ஆளுநர் என்ற வகையில் அவர் கிறிஸ்தவர்களின் செயல்பாடுகளைப் பற்றி நன்கு அறிந்திருந்தார். இவர், இரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் கிறிஸ்தவர்களைப் பற்றி ட்ரேஜனுக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். இந்தப் பதிவேடுதான் முன்பு மறைமுகமாய்ச் சுட்டிக்காட்டப்பட்ட மேற்கோளுக்கு மூல ஆதாரமாக உள்ளது: “அவர்கள் ஒரு குறிப்பிட்ட நாளில் வெளிச்சம் வருவதற்கு முன்பு ஒன்றுகூடிவரும் வழக்கமுடையவர்களாய் இருந்தார்கள்.”*[12]

*ஏறக்குறைய இதே வேளையில் எழுதப்பட்ட Didache என்ற நூலானது,*

"மற்றும் கர்த்தருடைய சொந்த நாளில் அப்பம் பிட்கும்படியும், நன்றிகள் ஏறெடுக்கும்படியும், உங்கள் பலியானது தூய்மையானதாக இருக்கும்படி முதலில் உங்கள் மீறுதல்களை அறிக்கையிடவும் ஒன்று கூடுங்கள்" என்று எடுத்துரைத்தது.[13]

இரண்டாம் நூற்றாண்டில் *பர்னபாவின் நிருபம்* என்ற புனை பெயர் கொண்ட நிருபம் ஒன்றும் எழுதப்பட்டது. இதில், "எனவே, நாமும் கூட மகிழ்வாயிருப்பதற்காக எட்டாம் நாளைக் கடைப்பிடிக்கின்றோம், இந்நாளில்தான் இயேசுவும் மரித்தோரில் இருந்து எழுந்தார் ..."[14] என்ற கூற்று உள்ளது. ஜஸ்டின் மார்ட்டிர் என்ற கிறிஸ்தவர் இது எட்டாம் நாள் என்று அழைக்கப்படுவது ஏன் என்று விளக்கம் அளித்தார்: "ஏனெனில், வாரத்தின் முதல் நாளானது எல்லா நாட்களிலும் முதலாவதானதாக இருந்தாலும், வளையத்தில் உள்ள நாட்களின் எண்ணிக்கையின்படியாக இது (முதலாவதாகவே இருப்பினும்) எட்டாவது நாள் என்று அழைக்கப்படுகின்றது."[15]

கிறிஸ்தவ சபை கூடுதல்கள் பற்றி இரண்டாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் ஜஸ்டின் பின்வருமாறு எழுதினார்:

> மற்றும், ஞாயிற்றுக் கிழமை என்று அழைக்கப்பட்ட நாளில் ஒரு நகரில் அல்லது ஒரு கிராமிய மாவட்டத்தில் வாழ்ந்த (கிறிஸ்தவர்கள்) யாவரும் ஒரே இடத்தில் ஒன்றுகூடும் வழக்கம் உள்ளது. அப்போஸ்தலர்களுடைய நினைவுக் குறிப்புகள் அல்லது தீர்க்க தரிசிகளின் எழுத்துக்கள் கால அவகாசம் அனுமதிக்கும் வரையிலும் வாசிக்கப்படுகின்றன.[16]

> ஆனால் ஞாயிற்றுக்கிழமையே நாங்கள் பொதுவாகக் கூடிவரும் நாளாக உள்ளது, ஏனென்றால், தேவன் இருளிலும் பொருளிலும் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி உலகத்தைப் படைத்தது இந்த முதல் நாளிலே தான்; மற்றும் நமது மீட்பராகிய இயேசு கிறிஸ்துவும் இதே நாளில் தான் மரித்தோரில் இருந்து எழுந்தார்.[17]

மேலும் இவர், இந்த நாளில் அவர்கள் ''தாங்கள் தேர்ந்துகொண்ட வகைமுறையின் அளவுப்படியே (காணிக்கை) கொடுத்தனர்'' என்றும் எழுதினார்,[18] இது கிறிஸ்தவர்கள் ஓய்வுநாளில் ஆராதிக்கவில்லை என்பதை மட்டுமின்றி, பழைய ஏற்பாட்டில் கட்டளையிடப்பட்டபடியாக அவர்கள் தசமபாகம் கொடுக்கவும் இல்லை என்பதற்கான ஒரு குறிப்பாக உள்ளது.

''கால அவகாசம் அனுமதிக்கும் வரையிலும்'' என்று ஜஸ்டின் அவர்களால் கூறப்பட்டதானது, கிறிஸ்தவர்கள் கூடி வந்த பிறகு வேலைக்குச் செல்வதற்கு ஏதுவாக உதயமாகும் முன்பே அவர்கள் கூடி வந்த காரணத்தால், அவர்கள் நேரத்தில் வரையறைப் படுத்தப்பட்டிருந்தனர் என்ற கருத்தைத் தெரிவிக்கின்றது. அவர்கள் யூதருடைய ஓய்வுநாளில் ஆராதித்திருந்தால், அவர்கள் வேலை செய்ய வேண்டியிராது ஆனால் நாள் முழுவதும் நேரத்தில் எவ்விதக் கட்டுப்பாடுகளும் இன்றி தாராளமான முறையில் ஆராதித்து இருந்திருப்பார்கள்.

ஜஸ்டின் அவர்கள், தமது Dialogue With Trypho என்ற நூலில், “எனது நண்பர்களே, நீங்கள் எங்களைக் குற்றப்படுத்துவதற்கு வேறு எவ்விஷயமும் இல்லை, இதைத் தவிர வேறு ஏதாவது உள்ளதா? அதாவது, நாங்கள் நியாயப்பிரமாணத்தின்படி வாழ்வது இல்லை, அல்லது நாங்கள் உங்கள் முன்னோர்களைப் போல மாம்சத்தில் விருத்தசேதனம் பெறவில்லை, அல்லது உங்களைப் போல ஓய்வுநாளைக் கடைப்பிடிப்பதில்லை.”[19]

கொரிந்து நகரில் மூப்பராய் இருந்த டயோனிஸியஸ் அவர்கள் கி.பி. 170ல் ரோமாபுரியில் இருந்த சபைக்கு எழுதிய ஒரு கடிதத்தில், “இன்றைய நாளில் நாங்கள் கர்த்தருடைய பரிசுத்த நாளுக்குக் கடந்து சென்றோம், அதில் நாங்கள் உங்கள் நிருபத்தை வாசித்துள்ளோம்.”[20]

லயன்ஸ் நகரின் மூப்பராய் இருந்த இரேனியுஸ் அவர்கள், கி.பி. 178ம் ஆண்டளவில், ரோமாபுரியில் இருந்த மூப்பருக்கு எழுதினார். அதில் “கர்த்தருடைய நாளில் மட்டுமே நமது கர்த்தருடைய உயிர்த்தெழுதலின் இரகசியத்தைக் கொண்டாடுதலின்” கடைமையைப் பராமரித்துள்ளார்.[21] ஒரு எழுத்தாளர் பின்வருமாறு முடிவு செய்தார்:

> ஞாயிற்றுக் கிழமையானது கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை நினைவுகூருவதற்காகக் கிறிஸ்தவ ஆராதனையின் நாளாக [இரண்டாம் நூற்றாண்டு முழுவதிலும்] கடைப்பிடிக்கப்பட்டது என்பதை இந்தச் சாட்சியங்கள் காண்பிக்கின்றன. இந்தக் காலத்தின் போது ஞாயிற்றுக் கிழமையானது ஓய்வுக்கான நாளாகக் கடைப்பிடிக்கப்பட்டது என்பதற்கோ அல்லது எந்த வழியிலும் இது யூதர்களின் ஓய்வுநாளுடன் தொடர்புடையதாகக் கடைப்பிடிக்கப் பட்டது என்பதற்கோ குறிப்பு எதுவும் இருப்பதில்லை.[22]

கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல் நாளான ஞாயிற்றுக் கிழமையன்று கூடி வந்தனர் என்பதை மூன்றாம் நூற்றாண்டுக் (கி.பி. 201-300) காலத்தின் பலத்த ஆதாரம் காண்பிக்கின்றது.

கி.பி. 201ம் ஆண்டில் எழுதிய தெர்த்துல்லியன் அவர்கள், “சூரியன் கிறிஸ்தவர்களின் கடவுளாய் உள்ளது என்று மற்றவர்கள் யூகித்தனர் … ஏனென்றால், நாம் ஞாயிற்றுக் கிழமையை ஒரு விழாநாளாக ஆக்கு கின்றோம் என்பது நன்கு அறியப்பட்ட உண்மையாக உள்ளது”[23] என்று எடுத்துரைத்தார். அவர் “ஓய்வுநாட்கள் என்பவை நமக்கு அந்நியமானவை களாக உள்ளன”[24] என்றும் எடுத்துரைத்தார்.

கி.பி. 200ம் ஆண்டளவில், பார்டேசனஸ் அவர்கள், “வாரத்தின் முதல் நாளாகிய ஒரு நாளில் நாங்கள் யாவரும் ஒன்று கூடுகின்றோம் …”[25] என்று எழுதினார்.

மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எழுதப்பட்ட அப்போஸ்தலர் களுடைய உபதேசம் என்ற நூலானது பின்வரும் அறிவுறுத்தலைப் பதிவு செய்துள்ளது:

> அப்போஸ்தலர்கள் பின்வருவதையும் நியமித்தனர்: வாரத்தின் முதல் நாளில் ஆராதனையும், பரிசுத்த வேதவசனங்களின் வாசிப்பும் மற்றும்

> படையலும் [பந்தியில் பங்கேற்றல்] நடைபெறட்டும்: ஏனெனில், வாரத்தின் முதல் நாளில் நமது கர்த்தர் உயிர்த்தெழுந்தார், மற்றும் வாரத்தின் முதல் நாளிலே அவர் பரலோகத்திற்கு எழுந்து சென்றார் மற்றும் கடைசியில் அவர் பரலோகத்தின் தூதர்களுடன் வாரத்தின் முதல் நாள் அன்று தோன்றுவார்.[26]

கார்த்தேஜ் நகரில் மூப்பராக இருந்த சிப்பிரியான் அவர்கள் எட்டாம் நாளில் ஆராதனை என்பதற்கு முன்பே எட்டாம் நாளில் விருத்தசேதனம் என்பது காணப்படுகிறது என்றார். அவர் கார்த்தேஜின் மூன்றாம் ஆலோசனைக் குழுவில் இருந்து கி.பி. 253ல் மத ஊழியர்களின் நிருபம் ஒன்றில் பின்வருமாறு எழுதினார்:

> “ஏனென்றால் எட்டாம் நாளானது ... கர்த்தர் மீண்டும் எழ வேண்டிய நாளாயிருந்தது ... எட்டாம் நாளான அது நமக்கு ஆவிக்குரிய விருத்த சேதனத்தைத் தருகின்றது ... கர்த்தருடைய நாளானது சித்தரிப்பில் முன்னால் சென்றது.”[27]

கிறிஸ்தவர்கள் தொடக்கத்திலிருந்தே ஞாயிற்றுக் கிழமையைத் தங்களின் ஆராதனை நாளாகப் பயன்படுத்தினார்கள் என்பதைத் தற்செயலான இந்தச் சாட்சியங்கள் காண்பிக்கின்றன. இங்கு கூறப் பட்டுள்ள குறிப்புகள் யாவும் கி.பி. 306-307ல் கான்ஸ்டன்டைன் என்பவர் ரோமப் பேரரசின் சக்கரவர்த்தியாக ஆவதற்கு முன்பாகவே எழுதப் பட்டிருந்தன. இந்தச் சக்கரவர்த்திதான் கிறிஸ்தவர்களின் ஆராதனையை சனிக்கிழமையிலிருந்து ஞாயிற்றுக்கிழமைக்கு மாற்றினார் என்று கூறுபவர்கள், தெளிவாகக் கூறும் இந்த ஆதாரத்திற்கு முரண்பாடாகவே அப்படிச் செய்கின்றனர். அவர் கிறிஸ்தவர்களின் ஆராதனை நாளை ஓய்வு நாளிலிருந்து ஞாயிற்றுக் கிழமைக்கு மாற்றவில்லை; மாறாக அவர் கி.பி. 321ல் ஏற்கனவே கிறிஸ்தவர்கள் ஆராதித்துக் கொண்டிருந்த நாளை, பேரரசின் முழுப் பகுதியிலும் உள்ள மதக்குழுவினர் யாவராலும் ஆராதனை ஏறெடுக்கப்படும்படியாகப் பொது விடுமுறை நாளாக்கிக் கட்டளை பிறப்பித்தார்.

தொடக்க கால சபையில் இருந்த எழுத்தாளர்களின் கூற்றுக்களை மேற்கோள் காட்டிய பிறகு, எவரெட் ஃபெர்குஸன் அவர்கள், “தொடக்கக் கிறிஸ்தவர்களின் ஆராதனை நாளுக்கான ஆதாரமானது தெளிவாகவும் தவறற்றதாகவும் உள்ளது. அவர்கள் யூதர்களைப் போல் ஓய்வுநாளான ஏழாம் நாளைக் கடைப்பிடிக்கவில்லை, ஆனால் அவர்கள் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் நாளான வாரத்தின் முதல் நாளிலே கூடி வந்தார்கள்”[28] என்று விளக்கம் அளித்தார்.

ஞாயிற்றுக்கிழமையன்று ஆராதனையை ஏறெடுக்க மறுக்கும் சிலர் அந்தக் கிழமையானது சூரியக் கடவுளைக் கனப்படுத்தும் பெயரைக் கொண்டுள்ளதால் அன்று ஆராதனை ஏறெடுப்பது தவறானது என்று வாதிடுகின்றனர். இது சரியான தர்க்கமாய் இருக்குமென்றால், அது போலவே சனிக்கிழமையன்று ஆராதனை ஏறெடுப்பதும் தவறானதாகவே

இருக்கும், ஏனென்றால் அந்த நாளானது விவசாயத்திற்கான ரோமக் கடவுளான சனியைக் கனப்படுத்துவதற்காக அப்பெயரைக் கொண்டுள்ளது.

## முடிவுரை

கிடைத்துள்ள வரலாற்றுத் தகவல் யாவும், கிறிஸ்தவர்கள் தொடக்கத்தில் இருந்தே வாரத்தின் முதல் நாளான ஞாயிற்றுக்கிழமையன்று இயேசுவைக் கனப்படுத்தி நினைவுகூருவதற்காக அப்பம் பிட்குதலிலும், திராட்ச இரசத்தை அருந்துவதிலும் பங்கேற்றனர் என்பதைக் காண்பிக்கின்றது. இதை அவர்கள் ஓய்வுநாளில் செய்யவில்லை. இஸ்ரவேலில் வாழ்ந்திருந்த யூதக் கிறிஸ்தவர்களும் மற்றும் வெளியிடங்களில் சிதறடிக்கப்பட்டிருந்த சிலரும் (புறஜாதியார் அல்ல) ஓய்வுநாளன்று தொடர்ந்து ஓய்ந்திருந்தார்கள்; இருப்பினும், அவ்வாறு செய்தவர்களும் கூட கர்த்தருடைய பந்தியை ஞாயிற்றுக்கிழமையன்றுதான் கடைப்பிடித்தார்கள்.

வில்லி ரோடார்ஃ அவர்கள் பின்வருமாறு மிகச் சரியாக முடிவு செய்தார்:

> … பழங்கால சபையில் கர்த்தருடைய பந்தியைக் கடைப்பிடிப்பதற்காக ஒரு உள்ளூர் சபை கூடிவராமல் ஒரு ஞாயிற்றுக்கிழமையைக் கடந்து செல்வது என்பது நினைத்துப் பார்க்க முடியாததாக இருந்தது. கர்த்தருடைய பந்தியில்லாத ஞாயிற்றுக்கிழமையானது முற்றிலும் ஒன்றுமற்றதாகக் கருதப்பட்டது; ஆராதனையின் மற்ற பாகங்கள் யாவும் கர்த்தருடைய பந்தியைச் சுற்றி அமையும் வகையில் அது அவர்களுடைய ஆராதனையின் மைய கவனத்தைப் பெற்று இருந்தது. மற்ற வேளைகளில் பொது ஜெபம் அல்லது பொது விருந்திற்கான கூடிவருதல்களும் இருந்தன, ஆனால் ஞாயிற்றுக் கிழமை மட்டுமே கர்த்தருடைய பந்திக்கான நாளாக இருந்தது.[29]

கிறிஸ்தவர்களுக்கு ஞாயிற்றுக் கிழமையானது - ஓய்வுக்காக அல்ல ஆனால் ஆராதனைக்காக - ஒரு விசேஷித்த நாளாய் இருக்கின்றது. இயேசு மீண்டும் வரும் வரைக்கும் அவரை நினைவுகூரும்படி கர்த்தருடைய பந்தியில் பங்கேற்பதற்காக அந்நாளில் கிறிஸ்தவர்கள் விசேஷமாகக் கூடிவருகின்றனர் (1 கொரி. 11:26).

---

குறிப்புகள்

[1]J. D. Douglas, ed., *The New International Dictionary of the Bible*, gen. ed. Merrill C. Tenney (Grand Rapids, Mich.: Regency Reference Library, Zondervan Publishing House, 1987), s.v. "Synagogue," by Walter W. Wessel. [2]F. F. Bruce, *Commentary on the Book of the Acts*, The New International Commentary on the New Testament, gen. ed. F. F. Bruce (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1986), 407-8. [3]Simon J. Kistemaker, *New*

*Testament Commentary: Exposition of the Acts of the Apostles* (Grand Rapids, Mich.: Baker Book House, 1990), 716. [4]Willy Rordorf, *Sunday,* trans. A. A. K. Graham (Philadelphia: Westminster Press, 1968), 221. [5]J. W. McGarvey, *New Commentary on Acts of Apostles,* vol. 2 (Lexington, Ky.: N.p., 1892; reprint, Delight, Ark.: Gospel Light, n.d.), 179. [6]*The Interlinear NASB-NIV Parallel New Testament in Greek and English,* interlinear trans. Alfred Marshall (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1993), 702. [7]H. Waterman, "the Lord's Day," in *The Zondervan Pictorial Encyclopedia of the Bible,* vol. 3, gen. ed. Merrill C. Tenney (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1975), 965. [8]*Gospel of Peter* 12:50, quoted in Everett Ferguson, *Early Christians Speak* (Abilene, Tex.: Biblical Research Press, 1971), 68. [9]Clement of Alexandria *Miscellanies* VII.xii.76.4, quoted in Ferguson, 68. [10]Waterman, 964.

[11]Geoffrey W. Bromiley, "Lord's Day," in *The International Standard Bible Encyclopedia,* gen. ed. Geoffrey W. Bromiley (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1986), 3:159. [12]Pliny *Letters* X.xcvi, quoted in Ferguson, 81. [13]*Didache* 14:1, in J. B. Lightfoot, trans. and ed., *The Apostolic Fathers,* ed. and completed J. R. Harmer (London: Macmillan and Co., 1891; reprint, Grand Rapids, Mich.: Baker Book House, 1971), 128. [14]*Epistle of Barnabas* 15, in Lightfoot, 152. [15]Justin Martyr *Dialogue With Trypho* 41:4, quoted in Ferguson, 68. [16]Justin Martyr *Apology I* 67.3. [17]Justin Martyr *Apology I* 67.7. [18]Justin Martyr *Apology I* 67.6. [19]Justin Martyr *Dialogue With Trypho* 10:1, quoted in Ferguson, 68. [20]Quoted in Eusebius *Ecclesiastical History* 4:23.

[21]Irenaeus, quoted in Eusebius 5:24. [22]Waterman, 966. [23]Tertullian *To the Nations* 1:13. [24]Tertullian *On Idolatry* 14:6, quoted in Ferguson, 68. [25]Bardesanes *On Fate,* quoted in Ferguson, 69. [26]*The Teaching of the Apostles,* The Ante-Nicene Fathers, vol. 8, 668. [27]Cyprian, *Epistle* 64:4, quoted in Waterman, 967. *முதலாம் மற்றும் இரண்டாம் நூற்றாண்டுகளில் ஞாயிற்றுக்கிழமையானது எட்டாம் நாளாகக் கணக்கிடப் பட்டது. ஞாயிற்றுக்கிழமை முதல் நாள் … சனிக்கிழமை 7ம் நாள், மறுபடியும் வரும் ஞாயிற்றுக்கிழமை 8ம் நாளாகக் கணக்கிடப்பட்டது.* [28]Ferguson, 70. [29]Rordorf, 305.